## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| **O.S. No. 85/2019** | **Date :** 01.03.2023 | **PW1** |
| Name: துரைசாமி | S/o. **அம்மாசி (எ) அம்மாசி கவுண்டர்** | |
| Evidence Recorded Time: 12.06 P.M. to 12.30 P.M | | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எனது அப்பா பெயர் அம்மாசி ஆகும். அவர் ஆடு மேய்க்கும் தொழில் செய்கிறார். எனது பூர்வீகம் வழக்கில் சொல்லியுள்ள ஊர்தான். தாவா சொத்தில் எத்தனை வருடங்களாக எனது அப்பா குடியிருந்து வந்தார் என்றால் 30 ஆண்டுகளாக குடியிருந்தார். பின்பு காலி செய்து அந்த இடத்தை விலைக்கு வாங்கினோம். எனது அப்பா தாவா சொத்தில் இருந்து எத்தனை வருடங்களுக்கு முன்பு காலி செய்தார் என்றால் தெரியவில்லை. நாங்கள் கிரையம் வாங்கிய சொத்தின் மீதுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா 30 வருடங்களாக குடியிருந்து பின்பு காலி செய்துவிட்டு, அதே இடத்தைதான் விலைக்கு வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி விவரங்களை வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தை யார் எங்களுக்கு கிரையம் செய்து வைத்தார்கள் என்றால் கே.ஆர்.கோவிந்தன் என்பவரின் மனைவி கிரையம் செய்து வைத்தார், அவர் பெயர் தெரியாது. அவர் பெயர் பூங்கொடி என்று நினைக்கிறேன். சர்வே எண்.37/1டி என்ற நிலத்தைதான் தான் கிரையம் வாங்கினேன். சர்வே எண்.37/1டி மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. எங்களுக்கு கிரையம் செய்து கொடுத்த கே.ஆர்.கோவிந்தனின் மனைவிக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சர்வே எண்.37/1டி -ல் 2 1/2 செண்ட் நிலத்தை கிரையம் வாங்கினோம். மேற்படி சர்வே எண்.37/1டி நிலம் யாருக்கு உண்மையில் பாத்தியப்பட்டிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு கிருஷ்ணம்மாள் தரப்பில் தாக்கல் செய்த பதிலுரையில் உள்ள விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் அதுபற்றி தெரியாது. எனக்கு தற்போது 42 வயதாகிறது. எனது அப்பா, மணி, கிருஷ்ணம்மாள் உள்ளிட்டோர் மீது மேட்டூர் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரின் வாரிசுகள் மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.746/1985 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கில் எனது அப்பாவையும் இதர ஆட்களையும் தாவா சொத்தில் இருந்து காலி செய்து மேற்சொன்ன மேட்டூர் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரின் வாரிசுகள் வசம் ஒப்படைக்க தீர்ப்பான விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பின்னிட்டு அந்த தீர்ப்பின் அடிப்படையில் மேட்டூர் உரிமையியல் நீதிமன்றத்தில் கே.கே.ராமனின் வாரிசுகள் ஒரு நிறைவேற்ற மனு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.

746/1985 ல் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் அந்த தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்தவர்களை வெளியேற்றி சுவாதீனத்தை ஒப்படைக்க கோரி REP.63/2022 என்ற நிறைவேற்று மனுவை தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் நீள அகலம் என்னவென்றால் 25X48 ஆகும். தாவா சொத்தின் வடக்குபுறம் கிருஷ்ணம்மாள் உள்ளதா என்றால் இல்லை. கிழக்குபுறம் ரோடு உள்ளது. தெற்கு புறம் ஒரு ரோடு உள்ளது என்றால் இல்லை. மேற்குபுறம் காலிமனை உள்ளது. அது யார் நிலம் என்று எனக்கு தெரியாது, அதேபோல வடக்கு புறம் உள்ள நிலமுமு யாருடையது என்று எனக்கு தெரியாது. எனது நிலத்திற்கு தெற்குபுறம் 6 அடி அகலத்தில் ஒரு கான்கீரிட் ரோடு மணி வீட்டிற்கு செல்கிறது என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி கான்கீரிட் ரோடு உள்ளதா என்பதை நீதிமன்ற ஆணையர் மூலம் பார்வையிடலாமா என்றால் எனக்கு ஆட்சேபனை இல்லை. தாவா சொத்தை வாங்கும் போது என் அப்பா சக்தி நகரில் வேறு ஒரு இடத்தில் குடியிருந்தார், தாவா சொத்திற்கும் என்அப்பா குடியிருந்த இடத்திற்கும் 1/4 கி.மீ துூரம் இருக்கும். 02.12.2009–ல் கிரையம் வாங்கினோம், கிரைய பத்திரத்தை படித்து பார்த்துதான் கிரையம் வாங்கினோம். கிரைய பத்திரத்தில் சென்னை மாவட்டம் 31, காலிங்கன் ரோடு, கில்கிறிஸ்ட் அவென்யூ எண்.25 வீட்டில் வசிக்கும் லேட். கே.கே.ராமன் மக்கள் ஆர்.கே.ராமன்(1), ஆர்.சேசசாய் (2), லேட்.ராஜகிருஷ்ண மூர்த்தி மனைவி கமலாமூர்த்தி(3) ஆகியோர்களை பவர் ஏஜெண்டான கே.ஆர்.கோவிந்தன் மனைவி அறிவுக்கொடி பவர் ஏஜெண்ட் என்ற முறையில் மனை காலி நில சுத்தக் கிரைய பத்திரம் (வா.சா.ஆ.1) எழுதிக்கொடுத்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி மூன்று நபர்களும் கிரையம் பத்திரம் வா.சா.ஆ.1 எழுதிக்கொடுத்த காலத்தில் உயிரோடு இருந்தார்களா என்று எனக்கு தெரியாது. அதைப்பற்றி விசாரித்தேனா என்றால் இல்லை.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.